2014 ஆகஸ்ட் 5]
336—

ஆவின் பாலகம்

*35951—**திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியிலுள்ள அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் ஆவின் பாலகம் அமைக்க மருத்துவமனை நிருவாகத்திடம் இட ஒதுக்கீடு கோரி தஞ்சாவூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின்மூலம் 11–3–2014-ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இட ஒதுக்கீடு கிடைத்ததும் ஆவின் பாலகம் அமைக்க ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலம் தந்த கருணை மழையே, கழகம் தந்த காவியமே, வற்றாத ஜீவ நதியே, இரண்டாம் வெண்மைப் புரட்சி செய்த எங்கள் இமயமே, (மேசையைத் தட்டும் ஒலி) கோமாதாவை தந்த எங்கள் குல மாதாவே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித பாதம் பணிந்து வணங்குகிறேன்.

[2014 ஆகஸ்ட் 5

சீர்காழி அரசு பொது மருத்துவமனைக்கு ஒரு நாளைக்கு சுமார் 1,600-லிருந்து 1,700 வரை புறநோயாளிகள் வந்துசெல்கின்றனர். உள்நோயாளிகளாக 176 நபர்கள் மருத்துவமனைக்கு வந்து, admit ஆகிறார்கள். அவர்களுடைய வசதியைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் விரைவில் அங்கே ஆவின் பாலகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கொள்ளிடம் பகுதியில் வட்டார வளர்ச்சி அலுவலகம், பத்திரப் பதிவு அலுவலகம், தொடக்கக் கல்வி அலுவலகம் போன்ற முக்கியமான அலுவலகங்கள் இருப்பதனால், கொள்ளிடம் கடைத் தெருவில் ஒரு ஆவின் பாலகமும், வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் வைத்தியநாதசுவாமி செவ்வாய் திருத்தலத்தை தரிசிக்க ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வதால், அங்கே ஒரு ஆவின் பாலகமும், அதேபோல், சீர்காழி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் ஒரு ஆவின் பாலகமும் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நிறுவனம்மூலம் பாலகம் அமைக்கப்பட வேண்டுமென்றால், பாலகம் அமைக்கப்படவுள்ள இடம் எந்தத் துறையைச் சார்ந்ததோ அந்தத் துறையிடம் அனுமதி பெற வேண்டும். அந்தவகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அத்துணை இடங்களிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அனுமதி பெற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அரசு பொது மருத்துவமனையின் முதல்வர் அவர்களிடம் ஆவின் பாலகம் அமைக்க அனுமதி கோரப்பட்டும், இதுநாள் வரை அனுமதி பெறப்படவில்லை. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி மருத்துவமனை முதல்வர் அவர்களுடைய

2014 ஆகஸ்ட் 5]

அனுமதி பெற மீண்டும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிப்பதோடு, அந்த அனுமதி கிடைத்தவுடன் தஞ்சாவூர் ஆவின் மூலமாக சீர்காழி அரசு பொது மருத்துவமனையில் பாலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது சீர்காழி தொகுதி மக்களினுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று கோரிக்கை வைத்த அனைத்துப் பகுதிகளிலும் ஆவின் பாலகம் அமைக்கப்படும் என்ற ஆரோக்கியமான பதிலை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைச் சொல்லி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் தற்காலிகப் பணியில் ஒரு திருநங்கையர் அமர்த்தப்பட்டு, பொதுமக்கள் மத்தியிலும். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

செல்வி கே. பாலபாரதி: அதேபோன்று மருத்துவர்கள், ஊழியர்கள் மத்தியிலேயும் அவருடைய சேவை பாராட்டைப் பெற்று வருகிறது. அவர்களுக்கு தனியார் துறைகளில் வேலை கொடுக்காததனால், நம்முடைய ஆவின் துறை மூலமாக milk booths அமைத்து, பால் பாக்கெட்டுகளை வாங்கி, விற்பதற்கு, தங்கள் துறையிலே விண்ணப்பித்தால் திருநங்கையர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களை அனுமதிப்பது குறித்து பரிசீலிப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.

[2014 ஆகஸ்ட் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) இப்படிக் கூப்பிட்டாலும் பேசமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) நான் என்ன செய்யட்டும்? (குறுக்கீடு) பேச அனுமதித்தால், நீங்கள் பேசமாட்டேன் என்கிறீர்களே!*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கு அறநிலையத் துறை மானியக் கோரிக்கை என்பதால், எந்தக் கோயில் குங்குமம் என்று கேட்கிறார்; அதற்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அரசு பொது மருத்துவமனையையொட்டி Super Specialty *மருத்துவமனையும் இருக்கின்றது. இது சேலம் மாவட்ட மக்களுக்கான பொது மருத்துவமனை மட்டுமல்ல, அருகிலே இருக்கின்ற நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களும் பல்லாயிரக்கணக்கிலே இங்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றார்கள். அந்த மருத்துவமனை வளாகத்திலே நிறைய இடம் இருக்கின்றது. ஆகையினாலே, அங்கே ஒரு ஆவின் பாலகம், அனைத்து ஆவின் உப பொருட்களோடு திறக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வைக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த மருத்துவமனையில் ஆவின் பாலகம் அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள்.*

2014 ஆகஸ்ட் 5]

மருத்துவமனை முதல்வர் அவர்களிடம் அனுமதி கேட்டு கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. அனுமதி பெற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 337, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

337—

குளிர்பதனக் கிடங்கு

***4616—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதி, ஜவ்வாதுமலைப் பகுதியில் வேளாண் விளைபொருட்களுக்கான குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

செங்கம் சட்டமன்றத் தொகுதியை சீர்மணக்கச் செய்திட்ட செந்தமிழின் ஜவ்வாது மணமே, (மேசையைத் தட்டும் ஒலி) அன்னையின் செந்தமிழ் நாட்டில் செங்கம் சட்டமன்றத் தொகுதி வளர்ச்சி பெற, மக்கள் நலம் பெற, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு செங்கம் சுரேஷ்குமார் அவர்கள், தான் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற, வெற்றிக்கே இலக்கணம் வகுத்து வாகை சூடிய, வீர வரலாறு படைத்திட்ட பிரபஞ்சத்தின் வெற்றித் திருமகளை நன்றி உணர்வோடும், விசுவாசத்தோடும், நேரில் சந்தித்து, வரம் கேட்டு, வணங்கிய கரங்கள் விலகும் முன்பே வரம் தந்த அன்னை அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) செங்கம் சட்டமன்றத் தொகுதியில், செங்கத்தைத் தலைமையிடமாகக்